# 2 இந்திய செய்தியாளர்களுக்கு புலிட்சர் பரிசு

■ நியூயார்க்

இந்திய செய்தியாளர்கள் ஆனந்த் ஆர்கே, சுபர்ணா சர்மா ஆகியோருக்கு புலிட்சர் பரிசு அறிவிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்க செய்தியாளர் ஜோசப் புலிட்சர் நினைவாக, அமெரிக்காவின் கொலம்பியா பல்கலைக்கழகம் சார்பில் ஆண்டுதோறும் புலிட்சர் பரிசு வழங்கப்பட்டு வருகிறது.

இதன்படி இதழியல், இலக்கியம், உள்ளிட்ட துறைகளில் சாதனை படைத்தவர்களுக்கு நேற்று முன்தினம் புலிட்சர் விருது அறிவிக்கப்பட்டது. இதில் இந்திய செய்தியாளர்கள் ஆனந்த் ஆர்கே, சுபர்ணா சர்மா ஆகியோர் உள்ளனர். டிஜிட்டல் அரெஸ்ட் மோசடி தொடர்பாக, “டிராப்டு” என்ற பெயரில் முன்னணி ஊடகத்தில் விழிப்புணர்வு கார்ட்டூன் தொடர் வெளியானது. இந்த படைப்புக்காக ஆனந்த் ஆர்கே, சுபர்ணா சர்மா மற்றும் ஜப்பானை சேர்ந்த நடாலி ஒபிகோ பியர்சனுக்கு புலிட்சர் விருது அறிவிக்கப்பட்டு உள்ளது.



ஆனந்த் ஆர்கே



சுபர்ணா சர்மா

மகாராஷ்டிர தலைநகர் மும்பையை சேர்ந்த ஆனந்த் ஆர்கே, இந்திய கடற்படை மற்றும் பல்வேறு தனியார் நிறுவனங்களுக்காக புதுமையான கலை படைப்புகளை உருவாக்கி கொடுத்திருக்கிறார்.

டெல்லியை சேர்ந்த செய்தியாளர் சுபர்ணா சர்மா, அல் ஜெசீரா, பிபிசி, இந்து குழுமத்தின் பிரன்ட்லைன் இதழ் உள்ளிட்ட பல்வேறு ஊடகங்களில் செய்திகள், கட்டுரைகளை எழுதியுள்ளார்.

ஜப்பானை சேர்ந்த நடாலி ஒபிகோ பியர்சன் பிரதமர் மோடியின் அரசியல் வளர்ச்சி குறித்து அவர் எழுதிய செய்திகள், கட்டுரைகள் உலக அளவில் பெரும் கவனத்தை ஈர்த்தன.

# வர்த்தக ஒத்துழைப்பு இந்தியா - ஜமைக்கா ஒப்பந்தம்

கிங்ஸ்டன்

இந்தியா மற்றும் ஜமைக்கா நாடுகளுக்கு இடையே பல் வேறு ஒப்பந்தங்கள் கையெழுத்தாயின.

ஜமைக்கா நாட்டுக்கு 9 நாள் பயணமாகச் சென்றுள்ள வெளியுறவு அமைச்சர் ஜெய்சங்கர், அந்நாட்டு வெளியுறவு அமைச்சர் காமினா ஜே.ஸ்மித்தை திங்கள்கிழமை சந்தித்து விரிவாகப் பேசினார்.

அதன் பின்னர் செய்தியாளர்களிடம் ஜெய்சங்கர் கூறியதாவது:

டிஜிட்டல் பரிமாற்றம், கலாச்சாரம், விளையாட்டு மற்றும் டிஜிட்டல் பணப்பரிவர்த்தனை ஆகிய துறைகளில் சமீபத்தில் கையெழுத்தான புரிந்துணர்வு ஒப்பந்தங்களைச் செயல்படுத்துவது குறித்து விரிவாக விவாதிக்கப்பட்டது.

கரீபியன் நாடுகளுக்கான வர்த்தக நுழைவாயிலாக ஜமைக்கா திகழ்கிறது. இந்நாட்டின் கிட்சன் நகரில் இந்திய உதவியுடன் ஊரக வாழ்வாதாரத் திட்டம் வெற்றிகரமாக முடிக்கப்பட்டுள்ளது.

புயலால் பாதிக்கப்பட்ட ஜமைக்காவிற்கு மனிதாபிமான அடிப்படையில் 30 டயாலிசிஸ் இயந்திரங்கள், 40 மீன்பிடிப் படகுகள் மற்றும் 200 ஜிபிஎஸ் கருவிகளை இந்தியா வழங்கி வருகிறது. மேலும், ஐநா பாதுகாப்பு கவுன்சிலில் 2028-29 காலகட்டத்திற்கு இந்தியா தற்காலிக உறுப்பினராக ஜமைக்கா அளிக்கும் ஆதரவை வரவேற்கிறோம்.

இவ்வாறு அமைச்சர் ஜெய்சங்கர் கூறினார்.

# ஆராய்ச்சிகள் கல்விசார் ஆய்வறிக்கைகளுடன் நிற்கக் கூடாது

நமது நிருபர்

புது தில்லி, மே 5: ஆராய்ச்சி என்பது கல்வி சார்ந்த ஆய்வறிக்கைகளுடன் நின்றுவிடாமல் அது நிஜ உலக தயாரிப்புகள் மற்றும் தீர்வுகளாக மாற்றப்பட வேண்டும் என்று மத்திய கல்வி அமைச்சர் தர்மேந்திர பிரதான் செவ்வாய்க்கிழமை வலியுறுத்தினார்.

சென்னை ஐஐடி-இன் முதலாவது தொழில்நுட்ப மாநாட்டை தில்லி பாரத் மண்டபத்தில் மத்திய அமைச்சர் தர்மேந்திர பிரதான் தொடங்கி வைத்து பேசியதாவது: இந்தியாவின் கண்டுபிடிப்பு சூழல் ஒரு முக்கியமான திருப்புமுனையாக இருக்கிறது. சென்னை ஐஐடி போன்ற உயர்கல்வி நிறுவனங்கள் சிறப்பு மையங்களை நிறுவி ஆராய்ச்சிகளை ஊக்குவிக்க ஆணைகள் வழங்கப்பட்டுள்ளன. இது ஆராய்ச்சி உள்கட்டமைப்பை வலுப்படுத்துவதில் மத்திய அரசின் வலுவான உறுதிப்பாட்டை பிரதிபலிக்கிறது.

ஆராய்ச்சி என்பது கல்வி சார்ந்த ஆய்வறிக்கைகளுடன் நின்றுவிடாமல் அது நிஜ உலக தயாரிப்புகள் மற்றும் தீர்வுகளாக மாற்றப்பட வேண்டும். இந்தியாவின் திறமை ஏற்கெனவே பல வழிகளில் உலகளவில் முன்னணியில் உள்ளது. முழு கண்டுபிடிப்பு செயல்முறையை சீர்திருத்தவும் நவீனமயமாக்கவும் நேரம் வந்துவிட்டது. முன்னணி நிறுவனங்கள் எவ்வாறு தேசிய முன்னுரிமைகளுடன் ஆராய்ச்சியை ஒருங்கிணைக்க முடியும் என்பதை சென்னை ஐஐடி நிரூபித்துள்ளது.

அதன் சிறப்புமிக்க மையங்கள் மற்றும் இந்த தொழில்நுட்ப உச்சிமாநாட்டின் மூலம், ஆராய்ச்சியை புதுமைகளாக மாற்றுவதற்கான விஷயங்களை முன்னெடுத்துச் செல்கிறது. இது சமூகத்தை நேரடியாக பிரதிபலிக்கும் வளர்ச்சியடைந்த பாரதம் என்ற தொலைநோக்குப் பார்வைக்கு பங்களிக்கிறது. நமது சொந்த நாட்டிற்குள் நாம் ஏன் போதுமான புதுமைகளை உருவாக்கவில்லை? என்ற முக்கியமான கேள்வி இங்கே எனக்குள் எழுகிறது.

அறிவியல் மற்றும் தொழில்நுட்ப தேசிய வளர்ச்சியில் நாம் முன்னணியில் இருக்க வேண்டும். குறிப்பாக ஐஐடிக்கள் போன்ற உயர்கல்வி நிறுவனங்கள் மூலம் உலகளவில் முன்னிலை வகிக்க இந்தியாவுக்கு அபரிமிதமான ஆற்றல் உள்ளது. ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டுக்காக முன்மொழியப்பட்ட ரூ.1 லட்சம் கோடி நிதி போன்ற குறிப்பிடத்தக்க முதலீடுகள் தனியார் துறை மற்றும் ஸ்டார்ட் அப் நிறுவனங்களுக்காக வழங்கப்படுகின்றன.

ஐஐடி வளாகங்களிலிருந்து பல வெற்றிகரமான ஸ்டார்ட் அப்கள் மற்றும் யூனிகார்ன்கள் ஏற்கெனவே வெளிவந்துள்ளன. இருந்தாலும் இந்த முன்னெடுப்பில் ஒரு இடைவெளி நிலவுகிறது.

வெளிநாடுகளில் உள்ள இந்திய திறமைசாலிகளால் உருவாக்கப்பட்ட தொழில்நுட்பத்தின் பெரும்பகுதி இந்திய தொழில்துறைகளால் வெளிநாட்டு சந்தைகளிலிருந்து வாங்கப்படுகிறது.

இது உள்நாட்டில் நமது சொந்த தயாரிப்புகளை உருவாக்கி முதலீடு செய்ய வேண்டியதன் அவசியத்தை குறிக்கிறது என்றார் தர்மேந்திர பிரதான்.

இந்நிகழ்ச்சியில் மத்திய கல்வி இணை அமைச்சர் ஜெயந்த் செளதரி, சென்னை ஐஐடி இயக்குநர் வி. காமகோடி, பேராசிரியர் அஸ்வின் மகாலிங்கம் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

மத்திய கல்வி அமைச்சர் தர்மேந்திர பிரதான்



தில்லி பாரத் மண்டபத்தில் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற தொழில்நுட்ப உச்சிமாநாட்டில் மத்திய கல்வித் துறை அமைச்சர் தர்மேந்திர பிரதானுக்கு நினைவுப் பரிசு வழங்கிய சென்னை ஐஐடி இயக்குநர் வி. காமகோடி.

KPR IAS Academy
Institute for IAS, IPS, IFS and TNPSC Exams
Learn Beyond
No. 5, AKS Nagar, Near Gandhi Park, Coimbatore - 641 001

# போதிய இருப்பில் 'இம்யுனோகுளோபலின்' மருந்துகள்

## சுகாதாரத் துறை அறிவுறுத்தல்

சென்னை, மே 5: அரசு மற்றும் தனியார் மருத்துவமனைகளில் ரேபிஸ் தடுப்பூசிகள் மற்றும் 'இம்யூனோகுளோபலின்' மருந்துகள் போதிய அளவில் இருப்பு வைத்திருப்பது அவசியம் என சுகாதாரத் துறை அறிவுறுத்தியுள்ளது.

கல்வி நிறுவனங்கள், மருத்துவமனைகள், பொது இடங்களில் தெருநாய்கள் நுழைவதைத் தடுப்பது தொடர்பாக உச்ச நீதிமன்றம் அண்மையில் முக்கிய உத்தரவைப் பிறப்பித்தது.

அதை மருத்துவமனைகளில் அமல்படுத்தும் வகையில், அதற்கென சிறப்பு தொடர்பு அதிகாரிகளை அனைத்து அரசு மருத்துவமனைகளிலும் நியமிக்க அறிவுறுத்தப்பட்டது. அதன்படி ஆரம்ப சுகாதார நிலையங்கள், நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையங்களில், வட்டார மருத்துவ அதிகாரியும், அரசு மருத்துவமனைகளில், தலைமை மருத்துவ அதிகாரியும், மருத்துவ கல்லூரி மருத்துவமனைகளில் நிலைய மருத்துவ அதிகாரியும் தொடர்பு அதிகாரிகளாக நியமிக்குமாறு தேசிய மருத்துவ ஆணையம் (என்எம்சி) சார்பில் கேட்டுக் கொள்ளப்பட்டது.

அவர்கள் குறித்த விவரங்கள் மருத்துவமனை முகப்பில் காட்சிப்படுத்த வேண்டும். அந்த அதிகாரிகள் மருத்துவமனையை தூய்மையாக பராமரிப்பதற்கும், தெருநாய்கள் உள்ளே ஊடுருவாமல் தடுப்பதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அனைத்து அரசு மற்றும் தனியார் மருத்துவமனைகளில் ரேபிஸ் தடுப்பூசிகளும், இம்யூனோகுளோபலின் மருந்துகளும் போதிய அளவில் இருப்பில் இருப்பதை உறுதி செய்ய வேண்டும் என்றும் அறிவுறுத்தியது.

இந்நிலையில், அதனை சுகாதாரத் துறையும் வலியுறுத்தியுள்ளது. தடுப்பூசி இருப்பு விவரங்களை சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு தெரியப்படுத்த வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.